முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 07.11.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 68/2024**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விநாயகம் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | கன்னியப்பன் | வயது | : | 31 |
| ஊர் | : | சிறுவேலியநல்லூர் | தொழில் | : | கட்டிட தொழிலாளர் |

**வா.சா. 2 (விநாயகம்): குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாக்கல் செய்த வாதி கன்னியப்பன் என்னடைய தகப்பனார் என்று சொன்னால் சரிதான். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கன்னியம்மாள் என்பவர் யார் என்றால் என் அப்பா வழி பாட்டி ஆவார். பிரதிவாதிகளான சேட்டு மற்றும் கண்ணன் என்னுடைய பங்காளிகள் என்று சொன்னால் சரிதான். அ அட்டவணை சொத்தானது வாதி கன்னியப்பனுக்கும் ஆ அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கும் 2021ல் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆ அட்டவணை சொத்தானது முதலிலும் அ அட்டவணை சொத்தானது அதற்கு பின்பும் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். அ அட்டவணை சொத்துக்கு பின்புறம் அமைந்துள்ள சொத்துக்கள் யாருடையது என்றால் குட்டி கண்ணன் ஆகியோர்களுடையது. சுரேஷ் மற்றும் இளங்கோ ஆகியோரின் நிலமும் அதன் அருகிலேயே உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன சுரேஷ் இளங்கோவன், கண்ணன், குட்டி ஆகியோர்கள் தங்கள் நிலத்திற்கு செல்லவேண்டுமென்றால் பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். ஏரி வழியாகவும் செல்வார்கள் ஏரி நிரம்பியிருக்கும்போது பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாகவும் செல்வார்கள். வழக்கு அ அட்டவணை சொத்திற்கு ஏரி வழியாகவும் செல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளின் நிலத்தின் வழியேதான் செல்லமுடியும். மேற்படி நான் சொல்வதுபோல்

பிரதிவாதிகள் தங்கள் நிலத்தினை தடை செய்கிறார்கள் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசிவிட்டு வழக்கு தாக்கல் செய்தோம்.

3. மேற்படி வழக்கு சொத்தில் யார் முதலில் பயிர் இடுவார்கள் என்றால் இருவரும் ஒரே சமயத்தில்தான் பயிர் இடுவோம். நான் போக வர பிரதிவாதிகள் தடை செய்வது சமீபகாலமாகத்தான் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன் எந்த தடையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டு குடும்பத்தாருக்கும் பிரச்சனை ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பிரச்சனை என்னவென்றால் இருவருக்கும் பொதுவாக வீட்டு மனை உள்ளது. அதில் இருவருக்கும் சம பங்கு உள்ளது. ஆனால் அந்த வீட்டு மனையை அவர்கள்தான் ஆக்கிரமித்து ஆட்டு கொட்டகை வைத்தும் வருகிறார்கள். ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மேற்படி வீட்டை பிரித்துக்கொடுக்க வந்தார்கள் அன்றைய இரவு பிரதிவாதிகள் அந்த கொட்டகையில் 4 ஓரங்கள் மட்டும் தீ வைத்து எரித்துவிட்டு காவல் நிலையத்தில் நாங்கள்தான் எரித்தோம் என்று புகார் அளித்தார்கள். காவல் துறையினர் விசாரணை செய்து அவர்கள் சொல்வது பொய் என்று முடிவு செய்தனர்.

4. காவல் துறையின் முடிவானது பொய் என்றும் வாதியின் மனைவி பூங்காவனம் மற்றும் வாதியின் தம்பி ஆறுமுகம் ஆகியோர்கள்தான் தீ வைத்து எரித்துவிட்டதாலும் அதனால் அவர்கள் வழக்கு தாக்கல் செய்யப்போகிறார்கள் என்ற விவரம் தெரிந்து வழக்கினை திரும்ப பெறுவதற்காக மன்னிப்பு கடிதம் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் என் நிலத்திற்கு நான் போய் வரவோ நிலங்களில் பயிர் செய்யவோ பிரதிவாதிகள் தடை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் வேண்டுமென்றே எங்கள் நிலத்தில் காலதாமதமாக பயிர் செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பயிர் வைத்தபிறகுதான் எங்களின் நிலத்திற்கு விவசாயம் செய்வதற்கு இயந்திரங்கள் எடுத்துக்கொண்டு செல்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் தடை செய்கிறார்கள்.

5. மேற்படி பிரதிவாதிகள் தங்களின் நிலத்தில் அறுவடைக்கு தயாராக இருக்கும் போது எங்களின் வளர்ச்சி பெறாத பயிர்களை முன்னதாக அறுவடை செய்ய முயற்சி செய்து இயந்திரங்களை வைத்து பிரதிவாதிகளின் நிலங்களின் வழியாக அறுவடையை எடுத்து

செல்வதை தடை செய்கிறார்கள் என்று  சொன்னால் அதுபோலும் ஒருநாளும் செய்யவில்லை. மேற்சொன்ன நபர்கள் அனைவருக்கும் பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாகவும் ஏரி வழியாகவும் போய் வர எந்த தடையும் இல்லாமல் இருக்கிறது என்றும் நான் முன் விரோதம் காரணமாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கழனி காலியாக இருக்கும்போது நாங்கள் அதை பயன்படுத்துவதை பிரதிவாதிகள் தடை செய்யவில்லை என்று சொன்னால் அப்போதுதான் அவர்கள் தடை செய்கிறார்கள். மேற்படி பிரதிவாதிகள் பயிர் செயதுள்ளள இடத்தில் வாகனங்கள் எடுத்துச் செல்வதையும் மேற்படி விளை நிலங்களில் வழி பாதை கேட்பதற்கும் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி என்பவர் என் தந்தை என்பதால் நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.11.07 18:15:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு